சுருக்கு முறை வழக்கு எண்.430/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case S.TC.No. 430/2023 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : முகமது அலியார் (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : முகமது இப்ராகிம் |
| Village | : நத்தம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 69 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of March 2025

(புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் எதிரிக்கு எதிராக காசோலை மோசடி தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை புகார்தாரர் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 06.11.2023ம் தேதியிட்ட இந்தியன் வங்கி, நத்தம் கிளையின் காசோலை அசல் (காசோலை எண்.903153) ம.சா.ஆ.1 ஆகவும்,

2. 06.11.2023 தேதியிட்ட மேற்படி காசோலையை நத்தம் பாரத ஸ்டேட் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான சலான் அசல் – ம.சா.ஆ.2 ஆகவும்,

3. 08.11.2023 தேதியிட்ட மேற்படி காசோலை Drawers signature differs என்று திருப்பப்பட்டதற்கான நத்தம் பாரத ஸ்டேட் வங்கியில் வழங்கப்பட்ட திருப்புதல் குறிப்பாணை – அசல் – ம.சா.ஆ.3 ஆகவும்,

4. 20.11.2023 தேதியிட்ட புகார்தாரர், எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் – ம.சா.ஆ.4 ஆகவும்

5. 21.11.2023 ம் தேதி எதிரி மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான இணைய தள டிராக் கன்சைன்மெண்ட் – இணைய தள பதிவிறக்க நகல் – ம.சா.ஆ.5 ஆகவும்

6. 11.03.2010 ம் தேதியிட்ட மனுதாரரின் SBI வங்கி, நத்தம் கிளையின் பாஸ் புத்தகம் ஒப்பீட்டு நகல் – ம.சா.ஆ.6 ஆகவும்,

7. மனுதாரரின் ஆதார் சான்று அட்டை ஒப்பீட்டு நகல் – ம.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.01.20 18:40:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்